In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC | 266/2013 |
| PW: | 4 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 10.08.2026 நாள்: திங்கள் |
| பெயர்: | சங்காரெட்டி |
| த/பெ: | வையப்பன் |
| ஊர்: | நாலாட்டின்புதூர் |
| வேலை: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| வயது: | 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.08.2026**

**முதல்விசாரணை**

1) நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.04.2013 ம் தேதி கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணியில் இருந்த போது, அன்று மாலை 18.00 மணிக்கு சண்முகசிகாமணி நகரைச் சேர்ந்த ராமசாமி நாடார் மகன், இரத்தினபிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 159/2013, U/s. 341,294(b),323,506(ii) IPC ஆக வழக்கு பதிவு செய்தேன்.

2) காயம்பட்ட இரத்தினபிரகாஷ்–க்கு நிலைய மருத்துவ நமுனா – 14/2013 ன் படி கோவில்பட்டி அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தேன். இதன் அசல் புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் எண். 2 ற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் வைத்தேன். அதன் ஒரு நகலை உதவி ஆய்வாளர் திருமதி. உமா மகேஸ்வரி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை

செய்தார்கள். ( **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.